உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௬.] பிரமாதி ஞு ஆவணி மீ [பகுதி-௧௦.

Vol. 36. August—September 1939. No. 10.

கம்பராமாயண சாரம்.

[௩௮௨-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

கும்பகருணன்வதைப்படலம்.

இராமன் கும்பகருணனைக்கொன்றதைக் கூறுவது

இராவணனது இரங்கத்தக்கநிலைமை.

58 வாரணம் பொருத மார்பும் வரையினை[1] யெடுத்த தோளும்
நாரத முனிவற்[2] கேற்ப நயம்பட வுரைத்த[3] நாவும்
தாரணி மவுலி பத்துஞ் சங்கரன் கொடுத்த வாளும்
வீரமுங் களத்தே போட்டு[4] வெறுங்கையே[5] மீண்டு போனான்[6].

கொண்டுகூட்டு: (இராவணன்), வாரணம்பொருத மார்பும் வரையினை எடுத்ததோளும் நாரதமுனிவற்கு ஏற்ப நயம்பட உரைத்த நாவும் தார் அணி மவுலி பத்தும் சங்கரன் கொடுத்த வாளும் வீரமும் களத்தே போட்டு, வெறுங்கையோடு (இலங்கைநோக்கி) மீண்டுபோனான்.

பொருள்: (திசை) யானைகள் (எதிர்ந்து கொம்புகள் கொண்டு குத்திப்) பொருத மார்பையும், (கயிலாய) மலையைப் (பேர்த்து) எடுத்த தோள்களையும், (இசைவல்லோருள் சிறந்த) நாரதமுனிவன் (நன்றாயிருக்கிறதென்று) ஏற்றுக்கொள்ளும்வண்ணம் (அவன் மனத்தில்) இன்பம் உண்டாகும்படி (சாமவேதம்) பாடிய நாவையும்;

பத்துக் கிரீடங்களையும், சங்கரன்கொடுத்த வாளையும், வீரத்தையும் (பயன்படாதவைகளாகப்) போர்க்களத்திலே போட்டுவிட்டு வெறுங்கையோடு (போர்க்களத்தினின்று) திரும்பி (இலங்கையை நோக்கிப்) போனான் (இராவணன்).

வாரணம் - யானை. வரை - மலை. நயம் - இனிமை. பட - உண்டாக. உரைத்தல் - ஒலித்தல் (திவா. தமிழகராதி); 'உரைத்த' என்பது, இங்கே (சாமவேதத்தை) ஒலித்த (-இசைத்த - பாடிய) என்ற பொருள்படநின்றது. தார் - மாலை. மவுலி - கிரீடம். வெறுங்கையே - வெறுங்கையோடே: வேற்றுமைத்தொகை.

இப்பாட்டில் இராவணன் போர்க்களத்திற் போடாத மார்பு முதலியவற்றைப் போட்டுவிட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. இது விளங்கும்படி, அரியிலூர்ச் சடகோபையங்காரவர்கள் கூறியதாக, (மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்சரித்திரம்— இரண்டாம் பாகம் 24-ம் பக்கத்தில்) மகாமகோபாத்தியாய சாமிநாதையரவர்கள் எழுதியிருப்பதாவது:—

'இராவணன்மார்பில் தைத்திருந்த திக்குயானைகளின்கொம்புகள் அவன்மார்பில் அநுமான் குத்தியபொழுது அவன் முதுகு வழியே உதிர்ந்துபோனமையால் மார்பின்வன்மையையும், வேலால் மூர்ச்சித்துவிழுந்த இலக்குவனை அவன் தூக்கிக்கொண்டுசெல்வதற்கு மிகமுயன்றும் எடுக்கமுடியாமல் சலித்துநின்றமையால் தோள்வலியையும், 'ஊர்க்குப்போய்ப் படைகளைத் தொகுத்துக்கொண்டு யுத்தம்பண்ணுதற்கு நாளை வர எண்ணுகின்றனையா? சீதையை விட்டுவிடுதற்கு எண்ணுகின்றனையா? உன்கருத்து யாது?' என்று இராமன் கேட்டபோது அவன் மௌனமாகவே இருந்துவிட்டமையின் நாவின்வன்மையையும், அவன் கிரீடத்தை இராமபாணம் வீழ்த்திவிட்டமையால் கிரீடத்தையும், "நல்ல சமயத்தில் நம்மை உபயோகியாமல் இருந்துவிட்டானே; இனி இவனிடமிருப்பதில் யாதும் பயனில்லை" என்று அவனை இகழ்ந்து, ஈசன் அளித்த கொற்றவாள் அவனை நீங்கி அவரிடஞ் சென்றுவிட்டமையால் வாளையும் இழந்தானென்றும், மார்பு, தோள், நா என்பவை (அவற்றின் வலிமைக்கு) ஆகுபெயர்களென்றும் அவர் சொன்னதாக எனக்கு ஞாபகமிருக்கிறது' என்பது.

இப்படலத்திற்குமுந்திய முதற்போர்புரிபடலத்தில் 'இராவணன்மார்பில் தைத்திருந்த திக்குயானைகளின்கொம்புகள் அவன் முதுகுவழியே உதிர்ந்துபோனமை' 'கைக்குத்தது' என்ற 176ம் பாட்டிலும், இராவணனுடைய 'வேலால் மூர்ச்சித்துவிழுந்த இலக்குவனை அவன் தூக்கிக்கொண்டுசெல்வதற்கு மிகமுயன்றும் எடுக்க முடியாமற் 'சலித்துநின்றமை' 'எடுக்கலுற்றவன்' என்ற 212ம் பாட்டிலும், ' "ஊர்க்குப்போய்ப் படைகளைத் தொகுத்துக்கொண்டு யுத்தம்பண்ணுதற்கு நாளை வர எண்ணுகின்றனையா? சீதையை விட்டுவிடுதற்கு எண்ணுகின்றனையா? உன்கருத்து யாது?" என்று இராமன் கேட்டபொழுது அவன் மௌனமாகவேயிருந்துவிட்டமை,' 'அறத்தினாலன்றி' என்ற 252ம் பாட்டு முதலிய ஐந்துபாட்டுக்களிலும், 'அவன் கிரீடத்தை இராமபாணம் வீழ்த்திவிட்டமை' 'மின்னும்' என்ற 245ம் பாட்டிலும் கூறப்பட்டிருக்கின்றன.

'ஈசன் அளித்த கொற்றவாள் அவனை (இராவணனை) நீங்கி அவரிடஞ்சென்றுவிட்டமை' மேற்குறித்த முதற்போர்புரிபடலத்திற் கூறப்படவில்லை:

இப்படலத்துக்குப் பின்னுள்ள மாயாசனகப்படலத்தில் 'இலங்கையூர்' என்ற 51-ம் பாட்டில் 'புத்தேள் வலங்கிளர் வாளும் வேண்டில் வழங்குவன்' என வருவதும் அப்பாட்டின் (வை. மு. கோ.) உரையில் 'புத்தேள்வாள்—சிவபெருமான் தந்த வாள்' என வருவதும், அவ் வாளைப்பற்றி மேலேகூறியதற்கு விரோதமாயுள்ளன.

இராவணன், இராமனுடைய 'இரண்டுதோளினும் இரண்டு (அம்புகள்) எய்தான்' (240). உடனே இராமன், 'இராவணன்சிலையினை அறுத்தான்' (241). இராவணன் அம்புகள், வில்லொழிந்தமையால், விடமுடியாதனவாக, 'மற்றும் வெம்படை வாங்கினன் வழங்குறுமுன்னம்—இற்றவிந்துக எரிகணை இடையற எய்தான்' (242). இவ்வாறாக, எடுத்த ஆயுதங்களெல்லாம் பிரயோகிக்கப் படுமுன் அறுக்கப்பட்டொழிய, இராவணன், தன் இடையில்

இறுக்கிக்கட்டியிருந்த சங்கரன்வாளும், உபயோகித்தற்கு எடுக்கப் பட்டால், மற்றப்படைகளைப்போல அறுக்கப்பட்டு வீணாய்விடு மென்று அதனை இருந்த இடையிலேயே இருக்கவிட்டான். ஆத லால், அந்த வாள், மார்பு தோள் நா என்பவற்றைப்போல, இருந் தும் இல்லாததாய்ப் பயன்படாதுபோனதுபற்றிச் 'சங்கரன் கொடுத்த வாளும் களத்தேபோட்டு' என்றுசொன்னலாம். மற்றைய ஆயுதங்களொன்றையுங்கூறாது சங்கரன்வாளைமட்டும் கூறியது அதன் சிறப்புப்பற்றி யென்பது தெளிவு. அந்தவாள், அது போலப் பயன்படாதொழிந்த மற்றைய படைக்கலங்களுக்கு உப லக்கணம்.

இனி, முதலிரண்டடியில்வரும் 'மார்பு தோள் நா' என்பவை மூன்றும் உடம்போடு ஒன்றுபட்ட தற்கிழமைப்பொருள்களாகவும் மூன்றாமடியில்வரும் 'மவுலி வாள்' என்னும் இரண்டும் உடம் புக்குப் புறம்பான பிறிதின்கிழமைப்பொருள்களாகவும் இருத்தல் நோக்கத்தக்கது. இவ் விருவகைப்பொருள்கள்யாவும் உருவப் பொருள்களாகவும் நான்காமடியில்வரும் 'வீரம்' ஒன்றுமட்டும் அருவப்பொருளாகவும் இருத்தலும் கவனிக்கத்தக்கது.

எல்லாம் இழந்தமைக்குக் காரணம் வீரமிழந்தமையாதலால், அது, பாட்டின் முத்தாயிபர்கமான இறுதியடியினது தோற்றுவா யான முகப்பில்வைக்கப்பட்டது. அந்த 'வீரமும்' என்பதிலுள்ள உம்மை, இறந்தது தழுவியஎச்சவும்மையாயிருத்தலோடு, மேற் கூறியகாரணத்தினால், உயர்வுசிறப்பும்மையாயும் உள்ளது.

பாடபேதம்:—[1] வலியகுன்று. [2] ஆரணமுனிவர்க், [3] நயம்பெறவுரைத்த, நனிமறை சிறந்த; அருமறை பயின்ற. [4] விட்டு, போக்கி. [5] வெறுங்கையா, வெறுங்கையோடு. [6] இலங்கை புக்கான்.

இராவணன் இலங்கைக்குத் திரும்புதல்.

[தேவரை வென்று மூவுலகும் ஆளும் இராவணன் பின்வரும் பரிசனமும் எதிர்செல்லும் வாகனமும் இல்லாமல்,

தொடர்ந்துபோம் பழியி னோடும் தூக்கிய கரங்க ளோடும்
நடந்துபோய் நகரம் புக்கான் அருக்கனும் நாகம் சேர்ந்தான்.*]

இலங்கையை அடைந்த இராவணன் நாணச்செயல்கள்.

59 மாதிர மெவையு நோக்கான் வள[1]நகர் நோக்கான் வந்த
காதலர் தம்மை நோக்கான் கடற்பெருஞ் சேனை நோக்கான்
தாதவிழ் கூந்தன்[2] மாதர் தனித்தனி நோக்கத் தானோர்[3]
பூதல மென்னு நங்கை[4] தன்னையே நோக்கிப் புக்கான்.

கொண்டுகூட்டு: (இராவணன்) மாதிரம் எவையும் நோக்கான், வளநகர் நோக்கான், வந்த காதலர்தம்மை நோக்கான், கடல் (போலும்) பெரும் சேனை நோக்கான், தாதவிழ்கூந்தல் (உடைய) மாதர் தனித்தனி (தன்னை) நோக்க, தான் ஓர் பூதலம் என்னும் நங்கைதன்னையே நோக்கி (அரண்மனை) புக்கான்.

பொருள்: (இலங்கைநகருட்பிரவேசித்த இராவணன், தோல்வியுற்ற நாணத்தினால்) எந்தத்திசையையும் நோக்கானாய், நகர்வளத்தைக் காணானாய், (தன்னைக் காண)வந்த புத்திரர்களைப் பாரானாய், (வரவேற்கக்) கடல் (போலத் திரண்ட) சேனையைப் பாரானாய், மாதரெல்லாரும் தன்னைநோக்கிக்கொண்டிருக்க(த் தான் அவர்களொருவரையும் நோக்கானாய்ப்) பூமியாகிய மாதொருத்தியையே பார்த்துக்கொண்டு (தலைகவிழ்ந்து தரையைப்பார்த்தவண்ணமாய்த் தன் அரண்மனையை) அடைந்தான்.

எவையும் - எதையும்; ஒருமைப்பன்மைமயக்கம். மாதிரம் - திக்கு. காதலர் - புத்திரர். தாது - மலர். ['கள்வாய் தாதொடுவண்டிமிரும்' (பு.வெ.) தமிழகராதி]. தாது அவிழ் - பூ மலர்ந்த. புக்கான் - புகுந்தான் - அடைந்தான்.

---

* தூக்கியகரங்களோடும் - (எதிரிகளைச் செயிக்க உதவாமல் சுமையாகத்) தூக்கப்பட்ட கைகளோடும். அருக்கனும் நாகம் சேர்ந்தான் - (அப்போது) சூரியன் (அத்த) மலையை அடைந்தான். (ஆக, மாலைப்போது வந்தது.)

இராவணன் போர்க்களத்திலிருந்து வெற்றிபெற்றுத் திரும்பி வருவானென்றெண்ணி அவனை எதிர்கொண்டுசென்று காணும் அவாவினால், அவன் இலங்கையுள்ளே சென்றபோது எதிரேவந்த மைந்தரையும், அவனை வரவேற்கத் திரண்டிருந்த சேனையையும் நோக்கானாய், அவன் அரண்மனைக்குச்செல்லும்வழியில் 'தெருவில் வாரானோ,-சற்றே-திரும்பிப்பாரானோ'வென்று எண்ணி அவன் வருகையை எதிர்பார்த்துக்கொண்டுநின்ற மாதர்களெல்லாரும் தன்னைப் பார்த்துக்கொண்டிருக்க, தான் பூமிதேவியாகிய ஒரு மாதையே (தரையையே) பார்த்தவண்ணமாய்த் தன் அரண்மனைக் குட்சென்றானென்பது கருத்து.

இலங்கைநகருக்குள்ளே புகுந்தபின்பே அதன்வளத்தைக் காணக்கூடுமாதலின் 'வளநகர்நோக்கான்' என்றதனால், இராவணன் தன்நகருக்குள் வந்துவிட்டமை பெறப்படும். பெறப்படவே பின் வரும் புக்கான் என்பதற்கு 'நகரிற்புகுந்தான்' என்று பொருள் கூறுதலைக் காட்டிலும் 'அரண்மனையிற்புகுந்தான்' என்று பொருள் கூறல் பொருத்தமாயிருக்கிறது. 'நடந்துபோய் நகரம்புக்கான்' என்பது வருகின்ற, இப்பாட்டுக்கு முந்திய பாட்டில் இராவணன் இலங்கையையடைதற்கு முந்திய நிகழ்ச்சிகளும், இந்தப்பாட்டில், அரண்மனையையடைதற்குமுன் இலங்கைநகரில் நடந்த நிகழ்ச்சி களும், இதற்கடுத்த 'நாளொத்த' என்றபாட்டு முதலிய பாட்டுக் களில் அரண்மனையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளும் கூறப்பட்டிருக் கின்றன.

பாடபேதம்:—[1] வளர். [2] கோதை. [3] தானும், தானைப். [4] மங்கை.

அரண்மனையை அடைந்த இராவணன் தன்மை.

60 நாளொத்த நளின மன்ன முகத்தியர் நயன மெல்லாம்
வாளொத்த மைந்தர்[1] வார்த்தை யிராகவன் வாளி யொத்த
கோளொத்த சிறைவைத் தாண்ட கொற்றவற் கற்றை நாட்டன்[2]
தோளொத்த துணைமென் கொங்கை நோக்கங்குத் தொடர்கிலாமை.

கொண்டுகூட்டு: கோள் ஒத்தசிறை வைத்தாண்ட கொற்றவற்கு மைந்தர் வார்த்தை இராகவன் வாளி(யை) ஒத்த(ன); நாள் ஒத்த நளினம் அன்ன முகத்தியர் நயனமெல்லாம் வாள் ஒத்த(ன); (அவர்கள்) துணைமென் கொங்கை அங்கு (அவன்) நோக்கு தொடர்கிலாமை (அவன்) தன் அற்றை நாள் தோள் ஒத்த(ன).

பொருள்: இராவணனுக்கு, (அவன் அடைந்த தோல்வி யுணர்ச்சியினால்) அவன்மக்கள் (அன்போடுகூறும்) வார்த்தைகள் இராமபாணங்களொத்தன; அவன்மனைவியர் (காதலித்துப்பார்க்கும்) கண்கள் வாள்களையொத்தன; அவர்கள் தனங்கள் (அவனால் வெறுக்கப்பட்டு) அவன்பார்வை செலுத்தப்படாமல் (அவன் தோற்ற) அந்தத்தினத்தில் (வெற்றிபெறுதற்கு உதவாமல் வீண் சுமையாகக் கருதப்பட்டு வெறுக்கப்பட்ட) அவனுடைய தோள்களை ஒத்தன.

நாள் ஒத்த நளினம் - அப்பொழுது பூத்த தாமரைமலர். ஒத்தல், (பூத்தல்) பொருந்திய என்ற பொருள்பட நின்றது. அன்று பூத்த மலர், 'நாண் மலர்' என வழங்குதல் காண்க. நயனம் - கண். வாளி - அம்பு. கோள் - கிரகம். கோள் ஒத்த சிறைவைத் தாண்ட கொற்றவன் — 'நவக்கிரகதேவதைகளை (வென்று தன் மனத்துக்குப்) பொருத்தமான சிறைச்சாலையில்வைத்து (அடிமைகளாக) ஆண்ட வெற்றியுடைய இராவணன்.' அற்றைநாள் - (முதற் போர்நிகழ்ந்த) அந்தநாள். துணைமென் கொங்கை - (ஒன்றையொன் றொத்த) இரட்டையான மெல்லிய தனங்கள். அங்கு - அந்த(க் கொங்கை) இடத்தில். தொடர்கிலாமை - தொடராமல்.

ஈற்றடிப்பொருள், 'தனது தோள்களில் வதிகின்ற இரட்டையாகிய மெல்லியமுலைகளையுடைய வெற்றித் திருமகளினது பார்வை அவனிடத்திற் செல்லாமையால்' என்பது கம்பராமாயண அருங்கவி விளக்கம்.

போர்க்களத்திற்போல வீட்டிலும் வாளாலும் அம்பாலும் இராவணன் துன்புற்றானென்ற கவிசமற்காரம் பாராட்டத்தக்கது.

முந்தியபாட்டில் வந்த 'மாதர்' இராவணன்மனைவியரல்லாத மாதரையும் இந்தப்பாட்டில் உள்ள 'நளினம் அன்ன முகத்தியர்' அவன் மனைவியரையும் குறித்தன.

இந்த 'நாளொத்த' என்ற நான்காம்பாட்டிற்கூறிய நிகழ்ச்சிகளும், 'மந்திரச்சுற்றத்தார்' என்ற ஐந்தாம்பாட்டிற்கூறிய, மந்திரியர் மனைவியர் சேனாபதிகள் உறவினராகியவர்களின்கூட்டம் தன்

நிலைமையைக்கண்டு திகைத்துநிற்க, இராவணன் அவர்களைக் கடந்துசென்ற நிகழ்ச்சியும், அரண்மனையின் முற்றத்திலும் முகப்பிலும் நிகழ்ந்தனவென்றும், அதே ஐந்தாம்பாட்டில் 'கோயில்சேர்ந்தான்' என்பதற்கு (அரண்மனை முற்றமுகப்புக்களைக் கடந்தவன்) 'அரண்மனையின் உள்ளேபோய்ச்சேர்ந்தான்' என்பது பொருளென்றுங் கொள்க.

'ஆண்டொரு செம்பொற்பீடத்திருந்து' என்ற ஆறும்பாட்டில் அரண்மனையின் உள்ளே (கொலுமண்டபத்திலே) இருந்த சிங்காதனத்தில் அமர்ந்து தூதரைத் தருவித்தானென்று கூறியிருப்பதும், ஏழு எட்டாம்பாட்டுக்களில் எங்குமுள்ள இராக்கதவீரரெல்லாரையும் இட்டுவரும்படி அந்தத் தூதருக்குக் கட்டளையிட்டானென்று கூறியிருப்பதும், ஒன்பதாம்பாட்டில் தூதரை அனுப்பியபின் இளைப்பாறக்கருதி அரண்மனையில் பகிரங்கமான இடத்திலிருந்த சிங்காதனத்தினின் றெழுந்துசென்று அந்தரங்கமான ஓரிடத்தேயிருந்த படுக்கையிலே சேர்ந்தானென்று கூறியிருப்பதும், பத்துமுதலாக நாற்பத்தொன்று முடிவாகவுள்ள பாட்டுக்களில், இராவணன் படுக்கையிலமர்ந்திருந்தபோது அவனைக்கண்டு அவன் பாட்டன் மாலியவானும் அவன் பிரதம மந்திரி மகோதரனும் பேசியது கூறப்பட்டிருப்பதும் காணலாம். காணவே, இராவணன் போர்க்களத்திலிருந்து புறப்பட்டதுமுதல் படுக்கையிலமர்தல் முடிவாக நம் மனக்கண்முன் ஐந்துகாட்சிகள் ஒன்றன்பின்னொன்றாக நிகழ்வனவாம். அக்காட்சிகளின் விவரம் வருமாறு:—

முதற்காட்சி, போர்க்களத்துக்கும் இலங்கை வடக்குமதில் வாசலுக்கும் இடையேயுள்ள ஆள்வழக்கற்ற (-ஜனசஞ்சாரமில்லாத) வெற்றிடத்தில் இராவணன் தனியனாய் நடந்துவரல்.

இரண்டாங்காட்சி, அவன் மேற்கூறிய வடக்குவாயிலுக்கும் அரண்மனைவாசலுக்கும் (முற்றத்துக்கும்) நடுவேயுள்ள நகரப்பிரதேசத்தில் நகரமாந்தரைக் கடந்துசெல்லல்.

மூன்றாங்காட்சி, அரண்மனை முற்றத்திலும் முகப்பிலுங் கூடி, நின்ற மந்திரிகள் முதலியோரைக் கடந்துசெல்லல்.

நான்காம்காட்சி, அரண்மனையில் பகிரங்கமான இடத்தில் இருந்த சிங்காதனத்தில் இருந்து பலஇடங்களிலுள்ள இராக்கதரை இட்டுவரக் கட்டளையிடல்.

ஐந்தாம்காட்சி, அரண்மனையில் அந்தரங்கமான ஓரிடத்துள் படுக்கையிலமர்ந்து முதலில் மாலியவானோடும் பின்பு மகோதரனோடும் பேசுதல்.

'இப்படலத்து இரண்டாஞ்செய்யுளில் இராவணன் "இலங்கை புக்கான்" என்ற கம்பர் அவன் புக்கவிதத்தை 3, 4-ஆம் செய்யுளிற் கூறி 5-ஆம் செய்யுளால் அவன் அரண்மனையடைந்ததைக் கூறியதாகக் கொள்ளலும் ஆகும்.' இப்பொருள்கொள்ளுமிடத்து மூன்றாஞ் செய்யுளில் 'புக்கான்' என்றது 'கூறியதுகூறல்' ஆகாமல் 'அநுவாத'மாம்.

'"மாதிர மெவையும்" என்ற (3-ஆம்) பாட்டில் மாதரையும் மைந்தரையும் நோக்கானாய்ப் புக்கான் என்றவர் 'நாளொத்த' என்ற (4-ஆம்) பாட்டால் அதற்குக்காரணம் (ஆக) அம் மாதர்நோக்கும் மைந்தர்வார்த்தையும் அவனை வருத்தியமை கூறினார்' என்று கொள்ளலும் ஆகும்.

பாடபேதம்: [1] மக்கள், வானோர். [2] நாடன்.

இராவணன் தன் தூதரை அழைத்து எங்குமுள்ள இராக்கதரையும் இட்டுவரக் கட்டளையிடல்.

[இராவணனுடைய மனைவியரும் மைந்தரும் மந்திரிகளும் சேனைத்தலைவரும் அவன் நிலைமையைக்கண்டு திப்பிரமைகொண்டு எந்திரப்பாவைகள்போல நிற்க, அவன் அரண்மனையுள்ளேசென்று ஒரு செம்பொற்பீடத்திலிருந்து, சிறிது வருத்தந்தணிந்தபின்,

தூதரைத் தருவித்துச் சத்ததீவுகளிலும் மேலே மலைகளிலும் கீழே பாதாளத்திலும் வாழும் அரக்கரனைவரையும் போர்புரிதற்கு விரைவாக இட்டுவாருங்களென்று கட்டளையிட்டான்.

பின்பு இருந்த ஆதனத்தைவிட் டெழுந்துசென்று ஒரு மலர் மெத்தையில் அமர்ந்து சிந்தைகுடிகொண்ட நெஞ்சிலே நாணம் குடி புகுந்ததனால் தூங்கமுடியாதவனாய்ப் பெருமூச்சுவிடலானான்.]

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

ஒரு திருத்தம்.

[வை. சுந்தரேசவாண்டையார், ஆசிரியர், திருவையாறு.]

சென்ற ஆடிமாதச்செந்தமிழில் ௬அ௨-ஆம் பக்கத்து ஒரு வேண்டுகோள் - என்று தலையங்கமிட்டு யான் எழுதிய கட்டுரையின் 22-ஆம் வரியில் நகவனைவிற்குள் தஞ்சைஜில்லாவில் என்பதற்குப் பிரதியாக தஞ்சை, திருச்சி, தென்னாற்காடுஜில்லாக்களில் என்று அமைத்துப் படித்துக்கொள்ளவும்.

தா(யா)ராநகரவேந்தன் போஜதேவன் இயற்றிய

ஸரஸ்வதீகண்டாபரணம்

(கலைமகள் கழுத்தணி)

[சகசு-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

8. வாக்யகர்ப்பிதம்.

𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌸𑌮𑌾𑌵𑍇𑌶𑌾𑌦𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑌗𑌰𑍍𑌭𑌿𑌤𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 ॥ உசு ॥

ஒருவாக்கியத்தினிடையே வேருெருவாக்கியத்தையும் புகுத்திக்கூறுதல், (பொருளுணர்ச்சிக்கிடையறவுபயத்தலால்) 'வாக்யகர்ப்பிதம்' என்பர்.

உதாரணம்:—

𑌯𑌃 𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌨𑍍 𑌪𑍁𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌤𑌵 𑌦𑌶𑌕𑌣𑍍𑌠 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑍇𑌨 𑌸𑌃 ।
𑌰𑌕𑍍𑌷𑍈𑌨𑌂 𑌯𑌦𑌿 𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌤𑍇 𑌕𑍃𑌤𑌾𑌨𑍍𑌤𑌵𑌶𑌂 𑌨𑍀𑌯𑌤𑍇 𑌵𑌿𑌵𑌶𑌃 ॥

ஓ தசகண்டனே! உன் புதல்வரில் சிறந்தவன் எவனே அவன் இலக்குமணனுல்,—உனக்கு வலிமையுண்டாயின் அவனைக் காப்பாயாக—தன்வசமறச்செய்து கூற்றுவனிடம் செலுத்தப்படுகின்றான்.

இங்கே,—உனக்கு வலிமையுண்டாயின் அவனைக் காப்பாயாக-எனும் வேருெருவாக்கியம் இடையே புகுத்தப்பட்டமையால் இது 'வாக்கியகர்ப்பிதம்' எனப்படும்.

9. பின்னலிங்கோபமை.

𑌯𑌤𑍍𑌰𑍋𑌪𑌮𑌾 𑌭𑌿𑌨𑍍𑌨𑌲𑌿𑌙𑍍𑌗𑌾 𑌸𑌾 𑌭𑌿𑌨𑍍𑌨𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌤𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।

உவமான உவமேயங்கள் (ஆண்பாலுக்குப்பெண்பாலும்பெண்பாலுக்கு ஆண்பாலுமாகப்) பால் வேறுபட்டுவரின் அது பின்னலிங்கம் என்னும் குற்றமாம்.

உதாரணம்:—

வாவீவ் விஜயம் வ்யோம ஹம்ஸீவ யவமுஃ ஶஶீ ।
ஶஶிலேவேவ ஹம்ஸொாZயம் ஹம்ஸாவிஸிவ தெ யஶஃ ॥

குளத்தைப்போல் ஆகாயம் மாசற்றதாயுள்ளது. அன்னப் பெடைபோற் சந்திரன் வெளுத்திருக்கிறான். இந்த ஹம்ஸம் சந்திர கலைபோலிருக்கிறது. அன்னங்களின் கூட்டம்போலுள்ளது உனது கீர்த்தி.

வடமொழிநெறியில் 'வாவீ' என்பது பெண்பால்; 'வ்யோம' என்பது அலியாகிய ஒன்றன்பால்; 'ஹம்ஸீ' என்பது பெண்பால், 'ஶஶீ' என்பது ஆண்பால்; 'ஶஶிலேகா' என்பது பெண்பால், 'ஹம்ஸஃ' என்பது ஆண்பால்; 'ஹம்ஸாவலிஃ' என்பது பெண்பால், 'யஶஸ்' என்பது அலியென்னும் ஒன்றன்பால். இங்ஙனம் மாறு பட்ட பாற்சொற்களை உவமானமாயும் உவமேயமாயும் புணர்த்தமையால் இது பின்னலிங்கோபமை என்னும் குற்றமுள்ளதாயிற்று.

10. பின்னவசனோபமை.

ஸ்வெதஜ் நவச நம் யத்ர ஹீந வசநாவஜெ ॥ ௨௫ ॥

மாறுபட்ட வசனமுள்ள சொற்களை உவமானமாயும் உவமேய மாயும் புணர்த்துக்கூறப்படுவது 'பின்னவசனோபமம்' என்னும் குற்றமாம்.

உதாரணம்:—

ஸராம்ஸீவாமலம் வ்யோம குமுதாநீவ ஸிதஃ ஶஶீ ।
ஶஶீவ யவலா ஹம்ஸீ ஹம்ஸீவ யவலா திஶஃ ॥

குளங்கள்போல் வானம் தெளிந்துள்ளது; நாணற்பூக்கள் போலச் சந்திரன் வெளுத்திருக்கிறான்; சந்திரன்போல் அன்னப் பேடை வெளுத்திருக்கிறது; அன்னப்பெடைபோலத் திசைகள் வெளுத்துள்ளன.

இங்கே, 'ஸராம்ஸி' என்னும் பன்மை 'வ்யோம' என்னும் ஒருமைக்கும், 'காஸா:' என்னும் பன்மை 'ஸஸீ:' என்னும் ஒருமைக்கும், 'ஹம்ஸீ' என்னும் ஒருமை 'க்ஷௌம' என்னும் பன்மைக்கும் உவமானங்காட்டப்பட்டிருத்தலால் இது 'பின்னவசனோபமை' என்னும் குற்றமுள்ளதாயிற்று.

11. ந்யூனோபமை.

ந்யூநே நாதிஸயே ந்யூந ஸாம்யே நவிஸேஷணை:।

உவமானமானது உவமேயத்தைக்காட்டிலும் அடைமொழிகள்குறைவுபட்டிருப்பின், அது 'ந்யூனோபமை' என்னும் குற்றமுள்ளதாம்.

உதாரணம்:—

ஸம்ஹதசக்ரவாகயுகளா விகஸித கமலா மனோஜ்ஞஸம்ஹந்நா।
வாபீ வஹத்யபிநவ கோரசநவிஷ்டஸ்தநீ ஸாம்யம்॥

ஒன்றோடொன்று நெருங்கிய இரண்டு சக்கிரவாகப்பறவைகளுடன்கூடியதும், மலர்ந்ததாமரைப்பூக்களுடன் விளங்குவதும், தாமரைத்தண்டுகளால் வியாபிக்கப்பெற்றதுமான குளமானது, கோரோசனை பூசப்பெற்ற தனங்களையுடைய மடந்தைபோன்று களிப்பிக்கின்றது.

இங்கே உவமேயத்திற்கு மூன்று அடைமொழிகளும் உவமானத்திற்கு ஓரடைமொழியும் புணர்க்கப்பட்டமையால் உவமான அடைகுறைவுபடலாகிய 'ந்யூனோபமை' என்னும் குற்றமுள்ளதாயிற்று.

12. அதிகோபமை.

அதிகம் யத்ர நவிஸேஷ்யாத்தஸ்மாதயிகோபமா॥ ௨௬॥

உவமான அடைமொழிகள் உவமேய அடைமொழிகளைக் காட்டிலும் மிகுதியாயிருப்பது 'அதிகோபமை' என்னும் குற்றமென்ப.

உதாரணம்:—

[illegible]

[illegible]

புதியவையும் மனத்தைக் கவரக்கூடியவையுமான வளைகளால் அலங்கரிக்கப்பட்ட புதுமணப்பெண், மலர்ந்த பூங்கொத்துக்களால் இழுக்கப்பட்ட வண்டின்குழாத்துடன்கூடிய 'குந்த'வல்லி போல் விளங்குகிறாள்.

இங்கே உவமேயமாகிய பெண்ணுக்கு வளையணியுடைமையாகிய ஓரடைமொழியும், உவமானமாகிய குந்தக்கொடிக்கு மலர்ந்த பூங்கொத்துடைமை, வண்டின்குழாங்களால் சூழப்பட்டிருத்தல் எனும் இரண்டடைமொழிகளும் புணர்த்துள்ளமையால், உவமேய அடைமொழியினும் உவமான அடைமொழி மிக்கு 'அதிகோபமை' என்னும் குற்றமுளதாயிற்று.

13. பக்னச்சந்தம்.

[illegible]

எங்கே செய்யுளிலக்கணம் தவறிநின்றதோ அதைப் 'பக்னச்சந்தஸ்' என்னும் குற்றமுள்ளதென்ப.

உதாரணம்:—

[illegible]

[illegible]

யாதொரு கடவுளிடத்தில் தேவர், பிதிரர், கந்தருவர், அரக்கர், அசுரர் என்னும் ஐந்துவகையான புருடர்களும் ஆகாயமும் அடங்கிநிற்கின்றனரோ அக்கடவுளையே அந்தணர் அறிந்து (பக்தியாகிய) உயர்ந்த ஞானத்தைச் செய்துவரவேண்டும்.

இது 'சுலோகம்' எனும் பெயர்பெற்றதொரு விருத்தவகை. இதில் ஒவ்வோரடியிலும் ஐந்தாமெழுத்து லகு (தனிக்குறில்)

எழுத்தாகவேண்டுமென்பது இலக்கணம். அதற்குமாருகக் "குரு" எழுத்துக்கள் புணர்க்கப்பட்டமையால் இது 'பக்நச்சந்தம்' என்னும் குற்றமுள்ளதாயிற்று.

14. பக்னயதி.

ஸ்தாநே விரதிர்யஸ்ய தத்³ப⁴க்³நயதீஷ்யதே ॥ ௨௭ ॥

யதி (முடிக்குமிடம்) தவறிய வழிவருதல் 'பக்நயதி' என்னும் குற்றமாம்.

உதாரணம்:—

ப்³ரஹ்மேந்த்³ரோபேந்த்³ராதி³ கீ³ர்வாணவந்த்³யோ
ப⁴க்தாநாம் ஸம்பாத்³ரியே சந்த்³ரசூட³ஃ ।
ஸ்த்ரீணாம் ஸங்கீ³தம் ஸரோகண்ர்யந்நுகே
தத்³த்⁴வஸ்தாம்போ⁴த³ம் ஸத³ஸ்யப்⁴ராஜ மாநஃ ॥

பிரமன் இந்திரன் உபேந்திரன் முதலிய தேவர்களால் தொழத் தகுந்தவரும், மடந்தையர்களின் இசையைக்கேட்டுக்கொண்டும் தன்னுடைய தவசத்தால் முகில்களை விலக்கிக்கொண்டும் சபையில் விளங்குபவருமான சந்திரசேகரர் அடியவர்களுக்கு நன்மை செய்வாராக.

இந்த விருத்தச்சாதியில் ஒவ்வோரடியிலும் நான்காமெழுத்தில் யதியிருத்தல்வேண்டும் (சற்று நிறுத்துதற்கேற்பச் சொன்முடிந்து நிற்றல்வேண்டும்) என்னும் முறைதவறி அவ்விடத்தில் யதி ஒழித்துக்கூறப்பட்டிருத்தலால் இச்சுலோகம் 'பக்னயதி' எனப்படும்.

15. அசரீரம்.

க்ரியாபத³விஹீநம் யத³ஶரீரம் தது³ச்யதே ।

வினைச்சொல் (-பயனிலை) இன்றிவரும் வாக்கியம் 'அசரீரம்' என்னும் குற்றமுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

உதாரணம்:—

ஶைலஸுதாத்ருதார்த்தாங்கம் பாலசந்த்ராவதம்ஸினம் ।
ஶீர்ஷவேஷ்டிதகங்கம் ஸந்த்யாப்ரணதம் பூதநாயகம் ॥

மலைமகளால் தகைந்து கொள்ளப்பட்ட பாதியுடலுடையவரும், வளைந்த சந்திரகலையைச் சென்னியிற்கொண்டவரும், சந்தியா காலத்தில் வணங்கப்படுபவரும், தலையில் கங்கையை வைத்துக் கொண்டவருமான பூதநாதனை (பரமேசுரனை)

இச்சுலோகம் பயனிலையில்லாதுவந்தமையால் ‘அசரீரம்’ என்னும் குற்றமுள்ளதாயிற்று.

[தொடரும்.]

V. S. ராமஸ்வாமிசாஸ்திரி, B.A., B.L.,

மதுரை.

ஸ்ரீ:

மதிப்புரை

ஸ்ரீத்ரிபுராபரணம் (ஸ்ரீதிரிபுராபரணம்):—இது மதுரையி லுள்ள இராமேசுவர தேவஸ்தான பாடசாலையில் பிரதான வியா கரண பண்டிதராக விளங்கிவருபவரும் ஸாஹித்யம் வேதாந்தம் முதலிய பல்வேறு கலைத்துறைகளிலும் புலமிக்கவரும் ஸாஹித்ய பூஷணம் என்னும் சிறப்புப்பெயர் வாய்ந்தவரும் தோத்திரமும் காவியமுமான பலநூல்களை இயற்றியுதவிவருபவருமான பிரும்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்திசாஸ்திரியாரவர்களால் ஸ்ரீதிரிபுராம் பிகை விஷயமாக இயற்றப்பட்டது; வடமொழியில் ஸ்ரக்தரா என்று வழங்கும் அரிய விருத்தவகையில் சொற்சுவையும் பொருட் சுவையும் கற்பனையும் அணிநயமும் ஆசிரியருடைய வியாகரண பாண்டித்தியத்திற்கேற்ற பல சிறந்த பிரயோகங்களும் பிறஅலங்க ளும் நிறைந்த நூறுசுலோகங்களையுடையது.

இதனால் சாஸ்திரியாரவர்களுடைய கவிதாசாமர்த்தியமும் ரசஞசாமர்த்தியமும் பலகலைத்துறைத்தேர்ச்சியும் நன்கு விளங் கும்.

இதனுட்காணப்படும் சுலோகங்களெல்லாம் சிறந்தனவாயி னும், செந்தமிழ்நேயரும் படித்து மகிழுமாறு ஸ்தாலீபுலாக நியாய மாகச் சில சுலோகங்கள் இங்கே குறிக்கப்படுகின்றன.

சுலோகம்—27.

உச்சைஸ்ஸம்ப்ரஸந்நாம் க்ஷமயஸி க்ருபயா விஶ்வஜாம்

ஜாடவிந்தஸ்ஸ்வாஜந்மா ஸர்வதவர்ணேஸுதோத்ஸவாநாம் ।

ஸந்தேவநாகஸ்பூர்ணாம் ஸமாரணஶாஸ்வமாநாம்

விஶ்ரமிஜவிஶ்ராம நவாஸேவநேதீக்ஷிதாம் ॥

இதன்பொருள்:—கொங்கைகளாகிய பெரிய பழங்களைக் கொண்டதும் படிப்படியாக வளர்ந்திருக்கிற கூந்தலான வண்டின் குழாங்களையுடையதும், புன்சிரிப்பாகிய மலர்களையுடையதும், பசுமைநிறம்வாய்ந்து மனத்தைக்கவர்வதும், மன்மதனாகிய காற்றினால் அசைக்கப்பட்டுப் பரமசிவனாகிய கொள்கொம்பைப்பற்றிப் பிணைந்திருப்பதும் ஆன பார்வதிதேவியாகிய கொடியை நான் பற்றுகிறேன்: என்பதாம்.

இதில் உருவகமும் சிலேடையும் விரவியமைந்திருப்பது மிகவும் நன்றாயிருக்கிறது.

சுலோகம்—43.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(இ-ள்.) ஏ இனிய சொற்களையுடைய தேவியே! நீ உன்னுடைய யாழைநோக்கி, 'வீணையே! நீ "உன்வார்த்தையின் இனிமை எங்கே? என்னுடைய கடுமையானஒலி எங்கே?" என்று எப்போதும் நினைத்துக்கொண்டு வருந்தவேண்டாம்' என்று நரம்பு வார்தலாகிற வ்யாஜத்தினால் அதை மார்புடன் அணைத்துச் சமாதானப்படுத்துகிறாயோ! (என்பதாம்.)

இது விஷமம் என்ற அணியுடன் தற்குறிப்பேற்றம் (உத்ப்ரேக்ஷை) என்னும் அணியும்விரவ இயற்றப்பெற்றிருத்தல் ரஸிகர்களைக் களிக்கச்செய்கிறது.

சுலோகம்—44.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(இ-ள்.) மதங்கொண்ட யானைபோல் மெல்லநடப்பவளே! மலையரசன் புதல்வியே! புதியவைகளான மல்லிகைமொட்டுக்களை வென்ற உன்னுடைய பல்வரிசையைக்கண்டு, கடலானது, தன் சொந்தப்பொருளான முத்துக்களை அவற்றுக்கு அவமானம் வரக்கூடாதென்று சிப்பிகளுக்குள் மறைப்பதுபோலும்: (என்பதாம்.)

இவ்வாறு சுலோகங்களைத் தூராந்வயம் (-கொண்டுகூட்டு) இன்றி இயற்றவல்ல சாஸ்த்ரியாரவர்கள் நீடுவாழ்ந்து மேலும் பல புதிய கிரந்தங்களையியற்றி உலகுக் குபகரிப்பாராக.

இப்புத்தகம் வேண்டுவோர் இதனையியற்றிய சாஸ்திரியாரவர்களுக்கு எழுதி விலைவிவரம் முதலியன தெரிந்துகொள்க.

சக்தி:—இது, ஒரு தமிழ் மாதவெளியீடு; அன்பும் அறிவும் அருளும் திருவும் அறமும் ஆற்றலும் இன்பவாழ்வும் இனிதமைய ஏற்பனபுரிதல் இதன் நோக்கமாகும். இதன் நிருவாக ஆசிரியர் ஸ்ரீ. வை கோவிந்தன் என்பார். இதனை வெளியிடுபவர் ஸ்ரீ. அ. கிருஷ்ணமூர்த்தி யென்பவராவர். இதன் முதற்பகுதி நிகழும் பிரமாதி ஆவணித்திங்களில் வெளியிடப்பெற்றுளது. இதற்குத் தமிழ்ப்பெரும்பேராசிரியரான ஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள் முதலான பெரியார் பலரும் பொருளுரை உதவியுள்ளார்கள். அரசியலும் உலகியலும் தேசசரித்திரமும் புலவர்வரலாறும் பூதபௌதிக நூலாராய்ச்சியும் பிறநூல மொழிபெயர்ப்பு முதலியனவும்பற்றி இதிற் காணப்படும் கட்டுரைகள், அவ்வவற்றுக்கேற்ற சொற்றொடர்களால் படிப்போர் மகிழுமாறு எழுதப்பட்டுள்ளன. ஒரு நாடு நலம்பெற இத்தகைய வெளியீடுகள் இன்றியமையாதனவாதலின், தமிழ்மக்கள் இது நன்கு வளரும்படி ஆதரிப்பார்களாக. இதன் வருடச்சந்தா உள்நாடுகளுக்கு ரூ 3—8—0. தனிப்பிரதி அணா—4. பர்மாவுக்கு ரூ 4. தனிப்பிரதி அணா 5. மலேயாவுக்கு ரூ 5-0-0. தனிப்பிரதி அணா 6. வேண்டுவோர் மானேஜர், சக்தி, 52 அரண்மனைக்காரத்தெரு, சென்னை: என்ற விலாசத்திற் பெறலாம்.

ஸ்ரீரமணதேவமாலை:—இது, ஸ்ரீ பாரத்வாஜி முகவைக்கண்ண முருகனாரால் அருணாசலத்துறை கருணாகரரான ஸ்ரீரமணதேவர் விஷயமாக இருநூற்றேழு வெண்பாக்களால் இயற்றப்பட்டது. இதில், முருகனார், ஸ்ரீரமணதேவரைச் சிவபிரானாகவும் முருகப் பெருமானாகவும் குருவாகவும் பாவித்துப் பலபலசமயத்தும் இயற்றிய துதிகவிகள், முன்னிலைப்பரவல் படர்க்கைப்பரவல் அருளிய வண்ணமுரைத்தல் ஆற்றுப்படை உறுதியுரைத்தல் பேற்றினை வியந்துரைத்தல் வாழ்த்தலாதிய பலதலைப்பின்கீழ்த் தொகுக்கப் பெற்று விளக்கமான குறிப்புரையுடன் திருத்தமாகப் பதிக்கப் பட்டுள்ளன. இதிற் காணப்படும் பாடல்கள் செய்யுட்குணங்கள் பலவும் உடையனவாகவும், ஸ்ரீரமணதேவர் மாண்புகளையும் அவர் பால் முருகனார்க்குள்ள ஈடுபாட்டினையும் விளக்குவனவாகவும், இவர்கள் வரலாற்றுப் பகுதிகளுட் சிலவற்றைத் துலக்குவனவாக வும் அமைந்துள்ளன. தம் கவித்திறத்தை வேறு விஷயங்களிற் செலுத்தாது குருவிஷயத்திற் செலுத்தி முருகனார் இயற்றியுதவிய இதனையும் ஸ்ரீரமணசந்நிதிமுறை முதலிய நூல்களையும் யாவரும் பெற்றுப் பயனடையும்படி அச்சிட்டுதவிவரும் ஸ்ரீரமணபாதாநந்த ருடைய குருபத்தி நன்குமதிக்கத்தக்கது. இதன்விலை அணா 4. வேண்டுவோர் சென்னை மயிலாப்பூரிலுள்ள கலைமகள் காரியாலயத் திற் பெறலாம்.

உ

ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் 1939-ஆம்௵ மார்ச்சுமீ 4உ நடத்திய

ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைகளில் தேறி

யோக்கியதாபத்திரம் பெறும் மாணுக்கர்களின் அபிதானபத்திரம்.

பி. ஏ., பரீக்ஷை.

தொடர்க்கு நெ.	ரிஜிஸ்டர் நெ.	2-வது வகுப்பு.
1	51(a)	T. S. *முத்துசாமி, ஸெண்ட்ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை.*
2	41	R. *சுப்பிரமணியன், ஷை ஷை*
3	47	V. *தோத்தாத்திரி, ஷை ஷை*
4	43	S. *சபாபதி, ஷை ஷை*
5	38	M. *இராமலிங்கம், மஹாராஜா ஸயன்ஸ் காலேஜ், திருவனந்தபுரம்.*
6	40	P. *செலஸ்தீன் ஜோசப் பெர்னுந்து, ஸெண்ட்ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை.*
7	23	V. *பாப்பு, ஸெண்ட்ஜோஸப் காலேஜ், திருச்சிராப்பள்ளி.*
8	6	M. K. *அருணசலம், அமெரிக்கன் காலேஜ், மதுரை.*
9	7	M. *மாரியப்பன், ஷை ஷை*
10	3	R. *பாலகோபாலகிருஷ்ணன், மதுரைக்காலேஜ், மதுரை.*
11	11	D. *ராஜன், ஸெண்ட்ஜோஸப் காலேஜ், திருச்சிராப்பள்ளி.*
12	42	K. *பாலசுப்பிரமணியம், ஸெண்ட்ஸேவியர்காலேஜ், பாளையங்கோட்டை.*

*

13 2 S. திருவேங்கடம், மதுரைக்காலேஜ், மதுரை.

14 49 V. ராஜமணி, ஸெண்ட் ஸேவியர் காலேஜ், பாளையங் கோட்டை.

15 19 P. சுப்பணன், ஸெண்ட்ஜோஸப்காலேஜ், திருச்சிராப்பள்ளி.

16 31 G. துரைராஜன், ஷை ஷை

17 22 K. கடம்பவனசுந்தரம், ஷை ஷை

18 15 S. G. முனியப்பன், ஷை ஷை

19 48 S. பிரான்சிஸ்பவுல்சுந்தரராஜ், ஸெண்ட்ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை.

20 9 G. ஆத்மநாதன், ஸெண்ட்ஜோஸப் காலேஜ், திருச்சி.

எப். ஏ. பரீக்ஷை.

2-வது வகுப்பு.

1 119 C. ஜேஸுதாஸன், மகாராஜா ஸயன்ஸ்காலேஜ், திருவனந்தபுரம்.

2 59 N. இராமசாமி, அமெரிக்கன்காலேஜ், மதுரை.

3 120 C. ஸாம்ரோஸ், மஹாராஜா ஸயன்ஸ் காலேஜ், திருவனந்தபுரம்.

4 74 T. வெங்கட்டராமன், ஸெண்ட்ஜோஸப் காலேஜ், திருச்சி.

5 170 N. T. வானமாமலை, பிரஸிடென்ஸிகாலேஜ், சென்னை.

6 85 K. P. பழனிசாமி, ஸெண்ட்ஜோஸப்காலேஜ், திருச்சி.

7 81 K. C. இரங்கசாமி, ஷை ஷை

8 106 P. L. குமரப்பன், ஷை ஷை

9 175 M. சண்முகம், பச்சையப்பாகாலேஜ், சென்னை.

10 116 D. கதிர்வேலு, ஸெண்ட்ஜோஸப்காலேஜ், திருச்சிராப்பள்ளி.

11 136 T. K. இராமசாமிபிள்ளை, முனிஸிபல் காலேஜ், சேலம்.

12 72 T. P. அம்பலவாணன், ஸெண்ட்ஜோஸப்காலேஜ், திருச்சி.

13 57 S. சீனிவாசன், அமெரிக்கன்காலேஜ், மதுரை.

14 160 R. நாகராஜன், பிரஸிடென்ஸிகாலேஜ், சென்னை.

15	121	A. முஹம்மது அப்துல்லா, மஹாராஜா ஸயன்ஸ் காலேஜ், திருவனந்தபுரம்.
16	176	P. அருணுசலம், பச்சையப்பா காலேஜ், சென்னை.
17	214	P. D. ஜட்சன்ஏபல், ஸெண்ட்ஜான்காலேஜ், பாளையங் கோட்டை.
18	125	M. அரங்கநாதன், முனிசிபல் காலேஜ், சேலம்.
19	163	S. இராமன், பிரஸிடென்ஸிகாலேஜ், சென்னை.
20	117	S. பொன்னுசுவாமி, ஸெண்ட்ஜோஸப்காலேஜ், திருச்சி.
21	193	C. N. பொன்னம்பலம், ஸெண்ட்ஸேவியர்காலேஜ், பாளை யங்கோட்டை.
22	159	A. K. ஸ்ரீநிவாஸன், ஊரீஸ்காலேஜ், வேலூர்.
23	213	K. நாராயணன், ஸெண்ட்ஜான்காலேஜ், பாளையங்கோட்டை.
24	131	V. சுப்பிரமணியன், முனிஸிபல்காலேஜ், சேலம்.
25	102	T. S. சீனிவாசன், ஸெண்ட்ஜோஸப்காலேஜ், திருச்சி
26	132	S. R. பெருமாள், முனிஸிபல்காலேஜ், சேலம்.
27	168	T. பெள்ளன், பிரஸிடென்ஸிகாலேஜ், சென்னை.
28	95	N. S. S. ஆரோக்கியசாமி, ஸெண்ட்ஜோஸப்காலேஜ், திருச்சிராப்பள்ளி.
29	137	V. அருணுசலம், முனிஸிபல்காலேஜ், சேலம்.
30	162	R. கிருஷ்ணசாமி, பிரஸிடென்ஸிகாலேஜ், சென்னை.
31	53	P. சுந்தரராஜன், அமெரிக்கன்காலேஜ், மதுரை.
32	186	R. முருகையா, ஸெண்ட்ஸேவியர்காலேஜ், பாளையங் கோட்டை.
33	211	T. P. வெங்கட்டராமன், ஸெண்ட்ஜான்காலேஜ், பாளையங் கோட்டை.
34	84	N. வாசுதேவன், ஸெண்ட்ஜோஸப்காலேஜ், திருச்சி.
35	139	K. R. சிவராமன், முனிஸிபல்காலேஜ், சேலம்.
36	153	V. R. நல்லையன், கவர்ன்மெண்ட்காலேஜ், கோயம்புத்தூர்.
37	169	T. சொக்கநாதன், பிரஸிடென்ஸிகாலேஜ், சென்னை.

38	198	M. S. கோபால், ஸெண்ட்ஸேவியர்காலேஜ், பாளையங்கோட்டை.	
39	97	G. திருப்பதி, ஸெண்ட்ஜோஸப்காலேஜ், திருச்சி.	
40	123	M. முகம்மதுஸாலி, மகாராஜாஸயன்ஸ்காலேஜ், திருவனந்தபுரம்.	
41	158	S. சம்பத்து, ஊரீஸ்காலேஜ், வேலூர்.	
42	204	B. ஷேக்இஸ்மாயில், ஸெண்ட்ஸேவியர்காலேஜ், பாளையங்கோட்டை.	
43	63	P. ஆரோக்கியசாமி, ஸெண்ட்ஜோஸப்காலேஜ், திருச்சி.	
44	68	L. G. ஸ்ரீநிவாசன், ஷை ஷை	
45	105	K. செங்கோடன், ஷை ஷை	
46	161	V. கோவிந்தன், பிரஸிடென்ஸிகாலேஜ், சென்னை.	
47	107	G. P. கிருஷ்ணன், ஸெண்ட்ஜோஸப்காலேஜ், திருச்சி.	
48	157	V. S. செல்லப்பா, ஊரீஸ்காலேஜ், வேலூர்.	
49	173	L. பாலகிருஷ்ணன், பிரஸிடென்ஸிகாலேஜ், சென்னை.	
50	212	P. S. ஜேம்ஸ்மாணிக்கவாசகம், ஸெண்ட்ஜான்காலேஜ், பாளையங்கோட்டை.	
51	62	M. இராமச்சந்திரன், ஸெண்ட்ஜோஸப்காலேஜ், திருச்சி.	
52	88	P. கலியப்பெருமாள், ஷை ஷை	
53	145	V. N. ஜகந்நாதன், முனிஸிபல்காலேஜ், சேலம்.	
54	76	R. S. கோபாலதேசிகன், ஸெண்ட்ஜோஸப்காலேஜ், திருச்சி.	
55	171	T. R. தம்புரெட்டி, பிரஸிடென்ஸிகாலேஜ், சென்னை.	
56	203	K. ராமநாராயணன், ஸெண்ட்ஸேவியர்காலேஜ், பாளையங்கோட்டை.	
57	60	W. C. கிருஷ்ணமூர்த்தி, ஸெண்ட்ஜோஸப்காலேஜ், திருச்சி.	
58	66	R. கிருஷ்ணமூர்த்தி, ஷை ஷை	
59	118	V. அய்யாவுபிள்ளை, ஷை ஷை	
60	216	S. ஜெயபாண்டியன், ஸெண்ட்ஜான்காலேஜ், பாளையங்கோட்டை.	
61	54	P. இராமசுவாமி, அமெரிக்கன்காலேஜ், மதுரை.	
62	124	T. ராமசுப்பிரமணியன், முனிஸிபல்காலேஜ், சேலம்.	

63	177	S சேவியர், ஸெண்ட்ஸேவியர்காலேஜ், பாளையங்கோட்டை.
64	210	G. ஞானமணி, ஷை ஷை
65	61	B. L. ஞானப்பிரகாசம், ஸெண்ட்ஜோஸப்காலேஜ், திருச்சி.
66	69	L. V. வரதராஜன், ஷை ஷை
67	78	M. பாலசுப்பிரமணியன், ஷை ஷை
68	101	V. பாலசுப்பிரமணியம், ஷை ஷை
69	128	V. இராமசாமி, முனிஸிபல்காலேஜ், சேலம்.
70	200	J. ராஜரத்தினம் சகாயம், ஸெண்ட்ஸேவியர்காலேஜ், பாளையங்கோட்டை.
71	152	M. அண்ணாமலை, கவர்ன்மெண்ட்காலேஜ், கோயம்புத்தூர்.
72	164	S. C. தர்மராஜ், பிரஸிடென்ஸிகாலேஜ், சென்னை.
73	184	P.S.K. செண்பகராஜரத்தினம், ஸெண்ட்ஸேவியர்காலேஜ், பாளையங்கோட்டை.
74	215	C. J. சாமுவேல், ஸெண்ட்ஜான்காலேஜ், பாளையங்கோட்டை.
75	224	D. டயமண்ட் பாலச்சந்திரன், ஷை ஷை
76	70	P. B. K. தியாகராஜன், ஸெண்ட்ஜோஸப்காலேஜ், திருச்சி.
77	149	L. கறுப்பசாமி, கவர்ன்மெண்ட்காலேஜ், கோயம்புத்தூர்.
78	151	C. மாணிக்கவாசகம், ஷை ஷை
79	166	T. நம்பிராஜன், பிரஸிடென்ஸிகாலேஜ், சென்னை.
80	80	K. கோபாலன், ஸெண்ட்ஜோஸப்காலேஜ், திருச்சி.
81	94	A. S. மரியதாஸ், ஷை ஷை
82	99	S. K. அப்துல்ஹமீத், ஷை ஷை
83	108	T. S. முத்துக்குமாரன், ஷை ஷை
84	109	D. குப்புசாமி, ஷை ஷை
85	126	K. S. நரசிம்மன், முனிஸிபல்காலேஜ், சேலம்.
86	130	K. கனகசபாபதி, ஷை ஷை
87	154	M. K. நடராஜன், ஊரீஸ்காலேஜ், வேலூர்.
88	172	S. மாணிக்கலால், பிரஸிடென்ஸிகாலேஜ், சென்னை.
89	207	K. M. கந்தசாமி, ஸெண்ட்ஸேவியர்காலேஜ், பாளையங்கோட்டை.

மெற்றிக்குலேஷன் பரீக்ஷை.

2-வது வகுப்பு.

1 481 தையநாயகி, Government Secondary School for girls, சேலம்.

2 871 G சேவு, பிண்டிலே ஹைஸ்கூல், மன்னார்குடி.

3 402 S கிருஷ்ணமூர்த்தி, போர்டுஹைஸ்கூல், குளித்தலை.

4 963 V இராமசுவாமி, ஹிந்துநாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி.

5 672 S கனகசபாபதி, ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல், சென்னை.

6 234 M பாலசுப்ரமணியன், சேதுபதி ஹைஸ்கூல், மதுரை.

7 876 M இராமசுவாமி, ஹைஸ்கூல், ஒரத்தநாடு.

8 897 B கண்ணன், ஸெண்ட்ஜோஸப் ஹைஸ்கூல், செங்கற்பட்டு.

9 274 R ரெங்கராஜன், ஸௌராஷ்ட்ராஹைஸ்கூல், மதுரை.

10 341 M மகமதுகௌஸ், ஸெண்ட்ஜோஸப் காலேஜ் ஹைஸ்கூல், திருச்சிராப்பள்ளி.

11 597 A திருமலைகோவிந்தன், ஹிந்து ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.

12 598 T G ஸ்ரீநிவாசன் டிை டிை

13 762 P ஆதிகேசவலு, ஹிந்து ஹைஸ்கூல், திருவல்லிக்கேணி, சென்னை.

14 881 K K கோபாலன், ஹைஸ்கூல், ஒரத்தநாடு.

15 962 P அருணாசலம், ஹிந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி.

16 969 V சீத்தாராமன், டிை டிை

17 235 V வெங்கிடாசலம், சேதுபதி ஹைஸ்கூல், மதுரை.

18 675 K G இராமகிருஷ்ணன், ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல், சென்னை.

19 820 P S சுப்பராமன், முனிஸிபல் ஹைஸ்கூல், மாயவரம்.

20 773 E வரதாசாரியன், ராமகிருஷ்ண மிஷன்ஹைஸ்கூல், தியாகராயநகர்.

21 778 P காளத்தி, டிை டிை

22 1008 T S கிருஷ்ணமூர்த்தி, A A M ஹைஸ்கூல், திண்டிவனம்.

23 1053 S ராஜகோபால், ஸெண்ட்ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை.

24 243 R ஜெனார்த்தனன், சேதுபதி ஹைஸ்கூல், மதுரை.

25 361 T N இராமச்சந்திரன், E R ஹைஸ்கூல், தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.

26 772 R இராமகிருஷ்ணன், ராமகிருஷ்ண மிஷன்ஹைஸ்கூல், தியாகராயநகர்.

27 360 M கிருட்டினசாமி, E R ஹைஸ்கூல், தெப்பக்குளம், திருச்சி.

28 725 P இராமன்நாயர், ஸர். எம். ஸிடி. முத்தைய செட்டியார் ஹைஸ்கூல், புரசபாக்கம், சென்னை.

29 736 M கலியாணசுந்தரம், ஷை ஷை

30 751 T வெங்கடேசன், ஷை ஷை

31 929 S கைலாசம், கால்டுவெல் ஹைஸ்கூல், தூத்துக்குடி.

32 1074 C K குத்தாலிங்கம், ஸெண்ட்ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை.

33 564 E தேவராசன், ஸெண்ட்பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

34 845 S V ராமச்சந்திரன், பிண்டிலே ஹைஸ்கூல், மன்னார்குடி.

35 875 R சங்கரன், ஹைஸ்கூல், ஒரத்தநாடு.

36 894 V கோவிந்தராஜு, ஸெண்ட்ஜோஸப் ஹைஸ்கூல், செங்கற்பட்டு.

37 898 P B கோபாலன், ஷை ஷை

38 245 A ராமசாமி, சேதுபதி ஹைஸ்கூல், மதுரை.

39 487 N வெங்கடேசன், போர்டு ஹைஸ்கூல், ஓசூர்.

40 577 V S இராமமூர்த்தி, ஸர். சிவஸாமி ஐயர் ஹைஸ்கூல், திருக்காட்டுப்பள்ளி.

41 603 M K செங்கல்வராயன், ஸ்ரீமகந்து ஹைஸ்கூல், வேலூர்.

42 878 K கண்ணையன், ஹைஸ்கூல், ஒரத்தநாடு.

43 889 T R நடராஜன், பச்சையப்பா ஹைஸ்கூல், காஞ்சீபுரம்.

44 404 K சோமசுந்தரம், C M ஹைஸ்கூல், திருநெல்வேலி.

45 490 E R சொக்கலிங்கம், ஸெக்கண்டரி & டிரெயினிங் டிபார்ட்மெண்டு, கவர்ன்மெண்டு காலேஜ், கோயமுத்தூர்.

46 693 P K கணபதி, கார்ப்பொரேஷன் ஹைஸ்கூல், நுங்கம்பாகம், சென்னை.

47 755 G துரையப்பன், ஹிந்து ஹைஸ்கூல், திருவல்லிக்கேணி, சென்னை.

48 758 K கோதண்டராமன் ஷை ஷை

49 814 K நாகராஜன், முனிஸிபல் ஹைஸ்கூல், மாயவரம்.

50 869 R அடைக்கலம், பிண்டிலே ஹைஸ்கூல், மன்னார்குடி.

51 965 R அய்யாச்சாமி, ஹிந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி.

52 1071 P ஜெகதீசன், ஸெண்ட்ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை.

53 345 K குருசாமி, ஸெண்ட்ஜோஸப் காலேஜ் ஹைஸ்கூல், திருச்சி.

54 390 T K சின்னையன், போர்டு ஹைஸ்கூல், லால்குடி.

55 493 G S நடராஜன், டையமண்டு ஜூபிலி ஹைஸ்கூல், கோபிசெட்டிபாளையம்.

56 816 N ராமதுரை, முனிஸிபல் ஹைஸ்கூல், மாயவரம்.

57 828 R கிருஷ்ணமூர்த்தி, L M C ஹைஸ்கூல், சீர்காழி.

58 852 A மஹபூப் உசேன், பிண்டிலே ஹைஸ்கூல். மன்னார்குடி.

59 1076 M V அருணப்பன், ஸெண்ட்ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை.

60 1113 G தாண்டவன், A R ஹைஸ்கூல், மதுரை.

61 574 P சுந்தரமூர்த்தி, ஸெண்ட்பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

62 757 S கந்தசாமி, ஹிந்து ஹைஸ்கூல், திருவல்லிக்கேணி, சென்னை.

63 901 ஸ்டான்லி உவில்லியம்ஸ், ஸெண்ட் ஜோஸப் ஹைஸ்கூல், செங்கற்பட்டு.

64 1077 T M S துரைச்சாமி, ஸெண்ட்ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை.

65 372 A M ஆரோக்கியசாமி, பொன்னையா ஹைஸ்கூல், பாலக்கரை, திருச்சிராப்பள்ளி.

66 607 T R இராமகிருஷ்ணன், ஸ்ரீமகந்து ஹைஸ்கூல், வேலூர்.

67 676 K S இராஜகோபாலன், ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல், சென்னை.

68 716 S ரங்கசாமி, கிறிஸ்டியன் காலேஜ் ஹைஸ்கூல், ஜார்ஜ்டவுன், சென்னை.

69 746 V சம்பத்நாராயணன், ஸர். எம். வீடி. முத்தைய செட்டியார் ஹைஸ்கூல், புரசபாக்கம், சென்னை.

70 1030 S சுந்தரேசன், ராமஸாமி செட்டியார் டவுன் ஹைஸ்கூல், சிதம்பரம்.

71 377 B கோபாலகிருஷ்ணன், பிஷப்ஹீபர் ஹைஸ்கூல், தெப்பக் குளம், திருச்சிராப்பள்ளி.

72 427 A V ஆழ்வார் சுப்பிரமணியன், காரனேஷன் ஹைஸ்கூல், ஸ்ரீவைகுண்டம்.

73 568 S P சொக்கலிங்கம், ஸெண்ட்பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

74 583 K சுவாமிநாதன், போர்டு ஹைஸ்கூல், பட்டுக்கோட்டை.

75 591 P இராமநாதன், ஷை ஷை

76 594 S சண்முகசுந்தரம், போர்டு ஹைஸ்கூல், அய்யம்பேட்டை.

77 904 C S திருஞானசம்பந்தமூர்த்தி, ஸெண்ட்ஜோஸப் ஹைஸ் கூல், செங்கற்பட்டு.

78 1012 R இராஜகோபாலன், A A M ஹைஸ்கூல், திண்டிவனம்.

79 355 B K வெங்கடராமன், E R ஹைஸ்கூல், தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.

80 356 C மாரிமுத்து, ஷை ஷை

81 383 M S பாக்கியம், பிஷப்ஹீபர் ஹைஸ்கூல், புத்தூர், திருச்சி ராப்பள்ளி.

82 417 E வெங்கடேசன், C M ஹைஸ்கூல், திருநெல்வேலி.

83 444 T M அங்கப்பன், முனிஸிபல் ஹைஸ்கூல், சேலம்.

84 741 R நடராஜன், ஸர்-எம்-வீடி. முத்தையசெட்டியார் ஹைஸ் கூல், புரசபாக்கம், சென்னை.

85 895 A பிச்சாண்டி, ஸெண்ட்ஜோஸப் ஹைஸ்கூல், செங்கற்பட்டு.

86 1011 J ரத்தினஞ்சயன், A A M ஹைஸ்கூல், திண்டிவனம்.

87 1022 A S லெக்ஷ்மணன், ஹிந்து ஹைஸ்கூல், கோபாலசமுத்திரம்.

88 1024 K இராமையா, ஷை ஷை

89 1028 C கோவிந்தராஜுலு, ராமஸாமி செட்டியார் டவுன் ஹைஸ்கூல், சிதம்பரம்.

90 1040 S ரெங்கசாமி, பச்சையப்பா ஹைஸ்கூல், சிதம்பரம்.

91 1062 T திருப்புரநாதன், ஸெண்ட்ஸேவியர் காலேஜ், பாளையங் கோட்டை.

92 1065 A ரெங்கசாமி, ஷை ஷை

93 358 T S கிருஷ்ணசாமி, E R ஹைஸ்கூல், தெப்பக்குளம், திருச்சிராபள்ளி,

94 394 ரா. சேதுரத்னம், போர்டு ஹைஸ்கூல், குளித்தலை.

95 488 T நாராயணன், போர்டு ஹைஸ்கூல், ஒசூர்.

96 562(a) M கும்பலிங்கம், ஸெண்ட்ஜோஸப் ஸெக்கன்டரி ஸ்கூல், கூடலூர். N. T.

97 601 S ராஜகோபாலன், ஹிந்து ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.

98 670 K முருகேசன், ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல், சென்னை.

99 686 V நடேசன், ஸ்ரீராமகிருஷ்ண மாணவரில்லம், மைலாபூர், சென்னை.

100 714 T செந்தாமரைக்கண்ணன், கிறிஸ்டியன் காலேஜ் ஹைஸ்கூல், ஜார்ஜ் டவுன், சென்னை.

101 735 சக்ரவர்த்தி இராகவன், ஸர். எம். ஸிடி. முத்தைய செட்டியார் ஹைஸ்கூல், புரசபாக்கம், சென்னை.

102 779 A R பாலசுப்பிரமணியன், ராமகிருஷ்ண மிஷன் ஹைஸ்கூல், தியாகராயநகர்.

103 1049 V T சங்கரராமன், போர்டு ஹைஸ்கூல், நாங்குனேரி.

104 252 A இராமசாமி, U C ஹைஸ்கூல், மதுரை.

105 285 M இருதயசாமி, ஸெண்ட்மேரி ஹைஸ்கூல், மதுரை.

106 403 S முத்தையா, C M ஹைஸ்கூல், திருநெல்வேலி,

107 505 A தங்கவேலு, மஹாராஜன ஹைஸ்கூல், ஈரோடு.

108 576 S T சேதுராமன், ஸெண்ட்பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

109 584 R முத்தையன், போர்டு ஹைஸ்கூல், பட்டுக்கோட்டை,

110 682 P S சேஷாத்திரி, ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல், சென்னை.

111 767 S இராமநாதன் ஹிந்து ஹைஸ்கூல், திருவல்லிக்கேணி, சென்னை.

112 795 மிஸ், H கோமதி, நாஷனல் கேர்ல் ஹைஸ்கூல், மைலாபூர், சென்னை.

113 1025 K P அய்யாப்பிள்ளை, ஹிந்து ஹைஸ்கூல், கோபாலசமுத்திரம்.

114 1047 R கிருஷ்ணன், போர்டு ஹைஸ்கூல், நாங்குனேரி.

115 1066 G குழந்தைசாமி, செண்ட்ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை.

116 1116 G லெக்ஷ்மிநாராயணன், A R ஹைஸ்கூல், மதுரை.

117 236 K அழகுசுந்தரம், சேதுபதி ஹைஸ்கூல், மதுரை.

118 259 T G ஹரிகிருஷ்ணமூர்த்தி, ஸௌராஷ்ட்ரா ஹைஸ்கூல், மதுரை.

119 698 K திரவியம், கிறிஸ்டியன் காலேஜ் ஸ்கூல், ஜார்ஜ் டவுன், சென்னை.

120 764 D பூபதி, ஹிந்து ஹைஸ்கூல், திருவல்லிக்கேணி, சென்னை.

121 769 A எதிராஜன், ஷை ஷை ஷை

122 1021 P A கோபாலகிருஷ்ணன், ஹிந்து ஹைஸ்கூல், கோபாலசமுத்திரம்.

123 1075 S வாசர்பி தேவிஸ்பீரிஸ், செண்ட்ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை.

124 232 K கிருஷ்ணமூர்த்தி, சேதுபதி ஹைஸ்கூல், மதுரை.

125 265 A R கோவிந்தன், ஸௌராஷ்ட்ரா ஹைஸ்கூல், மதுரை.

126 291 D குப்பம்மாள், செண்ட்ஜோஸப் ஹைஸ்கூல், மதுரை.

127 382 N S ரெங்கராஜு, பிஷப்ஹீபர் ஹைஸ்கூல், புத்தூர், திருச்சி.

128 391 மா. ப. அருணப்பன், போர்டு ஹைஸ்கூல், லால்குடி.

129 565 P இராமசாமி, செண்ட்பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

130 573 P R பாலசுப்பிரமணியன், ஷை ஷை

131 582 A N சஞ்சீவி, ஸர்-சிவஸாமி ஐயர் ஹைஸ்கூல், திருக்காட்டுப்பள்ளி.

132 704 G பாபு, கிறிஸ்டியன் காலேஜ் ஸ்கூல், ஜார்ஜ் டவுன், சென்னை.

133 883 A E கோதண்டராமன், பச்சையப்பா ஹைஸ்கூல், காஞ்சிபுரம்.

134 900 M அந்தோனிதாஸ், செண்ட்ஜோஸப் ஹைஸ்கூல், செங்கம்பட்டு.

135	1002	A ரெங்கநாதன், போர்டு ஹைஸ்கூல், திருத்துறைப்பூண்டி.
136	1018	A R இராமசுவாமி, ஹிந்து ஹைஸ்கூல், கோபாலசமுத்திரம்,
137	1060	P R வெங்கடாஜலம், ஸெண்ட்ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை,
138	1068	I பொன்னுசாமி, டிை டிை
139	1083	T K R குப்புசாமி, முனிஸிபல் ஹைஸ்கூல், திருப்பத்தூர். N A Dt.
140	1085	T S லக்ஷ்மணன், டிை டிை
141	263	T R துளசிராம, ஸௌராஷ்ட்ரா ஹைஸ்கூல், மதுரை.
142	344	V கோவிந்தராஜன், ஸெண்ட்ஜோஸப் காலேஜ் ஹைஸ்கூல், திருச்சிராப்பள்ளி.
143	373	C சேதுராமன், பிஷப்ஹீபர் ஹைஸ்கூல், தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.
144	374	T A மாணிக்கவாசகம், டிை டிை
145	506	R கோவிந்தராஜுலு, மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.
146	588	K முத்துஸாமி, போர்டு ஹைஸ்கூல், பட்டுக்கோட்டை.
147	596	R கிருஷ்ணசாமி, ஹிந்துஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.
148	777	T இராமகிருஷ்ணபந்துலு, ராமகிருஷ்ண மிஷன் ஹைஸ்கூல், தியாகராயநகர்.
149	783	R சகுந்தலாபாய், டிை டிை
150	784	M N இராஜலக்ஷ்மி, டிை டிை
151	885	N A அருணாசல, பச்சையப்பா ஹைஸ்கூல், காஞ்சீபுரம்.
152	960	V தர்மராஜ், ஹிந்துநாடார் விக்டோரியாஹைஸ்கூல், சிவகாசி,
153	961	J கிருஷ்ணன், டிை டிை
154	967	S அருணாசலம், டிை டிை
155	995	V சீனிவாசன், போர்டுஹைஸ்கூல், திருவாரூர்.
156	1004	S கோவிந்தன், போர்டுஹைஸ்கூல், திருத்துறைப்பூண்டி.
157	1038	M முருகேசன், பச்சையப்பாஹைஸ்கூல், சிதம்பரம்.
158	1063	R சுப்பிரமணியன், ஸெண்ட்ஸேவியர்காலேஜ், பாளையங்கோட்டை.
159	1070	A மரிய அந்தோனி, டிை டிை

160 244 P S சுந்தரம், சேதுபதி ஹைஸ்கூல், மதுரை.

161 266 K V ராஜாராம், ஸௌராஷ்ட்ரா ஹைஸ்கூல், மதுரை.

162 283 S ராமநாதன், ஸெய்ண்ட்மேரி ஹைஸ்கூல், மதுரை.

163 452 G சீனிவாசன், கோகுலநாத் ஹிந்து மகாஜன ஹைஸ்கூல், சேலம்.

164 567 D S சிவசுப்பிரமணியன், ஸெய்ண்ட்பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

165 599 S சுந்தரலிங்கம், ஹிந்து ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.

166 674 N சண்முகசுந்தரம், ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல், சென்னை.

167 697 S A கணபதி, கிறிஸ்டியன் காலேஜ் ஸ்கூல், G. T. சென்னை.

168 749 M சந்திரசேகரன், ஸர். எம். ஸிடி. முத்தைய செட்டியார் ஹைஸ்கூல், புரசபாக்கம், சென்னை.

169 774 K துவாரகாநாதராவ், ராமகிருஷ்ணமிஷன் ஹைஸ்கூல், தியாகராயநகர்.

170 781 S விசாலம் (பெண்), ௸ ௸

171 968 K ராஜகோபால், ஹிந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி.

172 970 G மகாதேவ சுப்பிரமணியன், ஹைஸ்கூல், பத்தமடை.

173 989 V சுப்பிரமணியன், போர்டு ஹைஸ்கூல், திருவாரூர்.

174 1036 B கணேசன், பச்சையப்பா ஹைஸ்கூல், சிதம்பரம்.

175 317 J ஸ்ரீநிவாசன், ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம்.

176 357 V வீரராகவன், E R ஹைஸ்கூல், தெப்பக்குளம், திருச்சி.

177 423 A சங்கரநாராயணன், C M ஹைஸ்கூல், திருநெல்வேலி.

178 468 A J பஷுபநாதம், Little Flower ஹைஸ்கூல், சேலம்.

